செய்தி வெளியீடு எண். 149 நாள்: 16.03.2018

# விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.03.2018) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை நெற் பயிரில் மொத்தம் 102016 ஹெக்டெரும், திருந்திய நெற்பயிரில் 67697 ஹெக்டெரும், சிறுதானியங்கள் 1042 ஹெக்டேரும், பயறுவகைகள் 10455 ஹெக்டேரும், எண்ணைய்வித்துக்கள் 8591 ஹெக்டெரும், கரும்பு நடவு 625 ஹெக்டேரும், மறுதாம்பு 5045 ஹெக்டேரும் பயிரிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 1,27,774 ஹெக்டெர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 2016 மற்றும் 2017-ஆம் ஆண்டுகளில் இயல்பை விட 9.58% அதிக அளவில் மழை பெறப்பட்டுள்ளதாகவும், 2018-ஆம் ஆண்டில் இதுவரை 8.96 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் திருவள்ளூர் மாவட்டத்தில் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சொட்டுநீர் பாசனம், மழைத்தூவுவான் மற்றும் தெளிப்புநீர் பாசனம் ஆகியவை முழு மானியமாக சிறு,குறு விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுப்பண்ணையத் திட்டத்தின்கீழ் 100 உறுப்பினர்கள் கொண்ட விவசாய உற்பத்தியாளர் குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவிற்கும் ரூ.5 இலட்சம் நிதி மூலதனம் வழங்கப்படுவதாகவும், 5 உற்பத்தியாளர் குழுக்கள் சேர்ந்து ரூ.15 இலட்சம் வரை பெற்று வேளாண் இயந்திரங்கள் வாங்கி விவசாய உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்திட்டம் குறித்தான வேளாண் உற்பத்தியாளர்கள் குழு நிர்வாகிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விற்பனையாளர்கள் கூட்டுக்குழு கூட்டம் 12.03.2018 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தப்பட்டு வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் 39 குழுக்களுக்கும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 3 குழுக்களுக்கும் ஆக 42 தேர்வு செய்யப்பட்ட குழுக்களுக்கு ரூ.2.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இத்தொகை 20.03.2018-க்குள் அளிக்கப்படுவதாகவும் தெரிவித்து. இதில் விவசாயிகள் பங்கு பெற்று பயன்பெற வேண்டும். நீடித்த நிலையான மானாவாரி இயக்கத் திட்டத்தின்கீழ் (MSDA) மானாவாரியாக உள்ள தரிசு நிலங்களில் சாகுபடி செய்வதற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி, ஆர்.கே.பேட்டை, மற்றும் பள்ளிப்பட்டு வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணிகள் மற்றும் மானாவாரி தொகுப்பு விவசாய குழுக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் 2016-17-ம் ஆண்டில் விடுபட்ட விவசாயிகளுக்கு ரூ.48 இலட்சம் ICICI காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும், 21 இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது மீதமுள்ள தொகை 31.03.2018-க்குள் அளிக்கப்பட உள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறினார்.

பின்னர், கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து 100-க்கும் மேற்பட்ட மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் மண்வள அட்டை இயக்கம் திட்டத்தின்கீழ் கடம்பத்தூர், பூண்டி, ஆர்.கே.பேட்டை, திருத்தணி, புழல், கும்மிடிப்பூண்டி, திருவாலங்காடு ஆகிய வட்டாரங்களில் உள்ள விவசாயிகளுக்கு மண்வள பாதுகாப்பு அட்டை வழங்கினார்.

பிரதம மந்திரி காப்பீட்டு திட்டத்தின்கீழ் காப்பீடு செய்து காப்பீடு தொகை பெறாத விடுபட்ட விவசாயிகளுக்கு இழப்புத் தொகை வழங்கவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் மூலம் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசம் 1 வருடமாக மாற்றியமைக்க வேண்டுதல், இறால் மற்றும் வண்ணமீன் பண்ணைகளை அகற்றவும், நீர் ஆதாரங்களான ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தடுப்பணை கட்டுதல், வரத்துக்கால்வாய், ஏரி குளங்களை சீர் செய்தல், விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு உரிய பதில் அளித்தல், காலியாக உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடங்களை நிரப்புதல், கரும்பு நிலுவைத் தொகை உடனடியாக தருதல், ஏரி மதகுகளை சீர்செய்தல், மணல்கொள்ளை தடுத்தல், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வழங்கும் விவசாய கடன்களை விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படுத்துதல், பொதுப்பணித் துறை மூலம் வாடகைக்கு வழங்கும் டிராக்டர் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குதல். பட்டா மாற்றம் செய்து வழங்குதல். தடுப்பணை கட்டுதல், வறப்பணை கட்டுதல், பாடியநல்லூர் பகுதியில் குப்பை கொட்டுவதற்கு மாற்று இடம் அமைத்து தருதல், ஏரிகளில் நிறுவனக்கழிவு கலப்பதால் ஏரிகள் மாசுபடுவதை தடுக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு. கோ.பாண்டியன், மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திரு.வி.எபினேசன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு. வெ.முத்துசாமி (பொன்னேரி), திரு ஜெயராமன் (திருத்தணி), திரு.பன்னீர்செல்வம் (அம்பத்தூர்), அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**